**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.78/2017**

**வா.சா. –2– செந்தில்நாதன்**

**நாள். 22.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்.**

**19ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 1976ல் பிறந்தேன். நான் வாதிகளின் உறவினர் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து பிரச்சினை என்று கேள்விப்பட்டேன், என்ன பரிகாரம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண், நான்குமால், விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியும். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 3வது பாராவில் 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் பொன்னன் முத்திரையாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன். அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்து படித்துள்ளேன். அந்த கிரைய பத்திரத்தின் சொத்து விபரத்தில் எவ்வளவு விஸ்தீரணம், சர்வே நம்பர் சொல்லப்பட்டுள்ளன என்று தெரியுமா என்றால் தோராயமாக தெரியும். பொன்னன் முத்திரியார் யாரிடம் இருந்து, எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ரூ.200க்கு கிரையம் வாங்கினார். லட்சுமியம்மாளோ, ரங்கம்மாளோ பெயர் சரியாக நினைவில்லை, அவரிடமிருந்து வாங்கியுள்ளார். வாதிகள் அனைவரும் பொன்னன் முத்திரியாரின் வாரிசுகள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பூசாரி என்ற சங்கர் முத்திரியாரின் வாரிசுகள் என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பூசாரி என்ற சங்கர் திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன், அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, பெரியவர்கள் சொன்னதை வைத்து தெரியும். அந்த பெரியவர்களை இந்த வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவர்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை. 26.08.1901ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தை பொன்னன் முத்திரியார், பூசாரி முத்திரியாருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் , அந்த பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பத்திரம் எவ்வளவு ரூபாய் கிரையத்திற்கு வாங்கினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரைய பத்திரத்தில் நான் சொன்னது போன்று, குழந்தைகள் இல்லை என்று பெயரளவில் எழுதி வைத்ததாக வாசகங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் தாவா 5ம் லக்க சொத்தை 15ம் பிரதிவாதியின் கணவர் வீரமலை முத்திரியார், பொன்னன் முத்திரியாரிடம் கிரையம் பெற்றதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் தேதி என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் படித்து பார்த்தேன், தற்போது ஞாபகமில்லை. அந்த மாதிரி ஒரு கிரையமே நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தரப்பில் மேற்படி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பூசாரி முத்திரியாருக்கு காஞ்சான் என்ற ஒரு மகன் இருந்தார் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு 4 ஏக்கர் 62 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என்றும், மீதமுள்ள சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. நான் பொதுவாக ஊர்களில் கட்டப்பஞ்சாயத்து பேசும் நபர் என்றால் சரியல்ல. வாதிகளிடம் பணம் வாங்கிவிட்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.22 18:34:33 +0530

Additional District Judge,

Dindigul.